# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண். 28

# அறிவிப்புகள்
# 2016–2017

திரு. **கடம்பூர் ராஜு**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

தமிழ்நாடு அரசு
2016

## 1. அரசுப் பொருட்காட்சிகளில் எல்.இ.டி மின் விளக்குப் பலகைகள் அமைத்தல்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** அரசுப் பொருட்காட்சிகளுக்கு வருகை தரும் பொதுமக்கள் அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் குறித்த விவரங்களை அறிந்து பயன்பெறும் வகையில், மாவட்டத் தலைமையிடங்களில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகளில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் எல்.இ.டி மின் விளக்குப் பலகைகள் அமைக்கப்படும்.

## 2. சென்னை மாநில செய்தி நிலைய நூலகத்தினை நவீனமயமாக்குதல்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** மாநில செய்தி நிலைய நூலகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், ஆன்மிகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் என பல்வேறு தலைப்புகளில் உள்ள சுமார் 50,000 நூல்களை கணினியில் பதிவு செய்து எளிதாகத் தேடி எடுப்பதற்கு ஏதுவாக நவீன மென்பொருள் ரூ.10.50 லட்சம் மதிப்பீட்டில் பொருத்தப்படும்.

## 3. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கேற்ப செய்தி மக்கள் தொடர்புத்துறையில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் புகைப்படக்கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படும்.

**4. மணிமண்டபங்கள் / நினைவகங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம் நவீன முறையில் $360^0$ பரிமாணத்தில் படம் எடுத்து அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** பொதுமக்களும், வெளிநாட்டினரும் வலைதளங்களின் வாயிலாக மணிமண்டபங்கள் மற்றும் நினைவகங்களை பார்வையிட ஏதுவாக, சென்னைப் பெருநகரில் உள்ள 14 மணிமண்டபங்கள் / நினைவகங்கள் மற்றும் கலைவாணர் அரங்கம் ஆகியவற்றை ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் $360^0$ பரிமாணத்தில் படம் எடுத்து அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

## 5. மாவட்டத் தலைநகரங்களில் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஆண்டுதோறும் பத்து மாவட்டத் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில், பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

மீதமுள்ள நான்கு அரசுப் பொருட்காட்சிகள் வெவ்வேறு மாவட்டத் தலைநகரங்களில் சுழற்சி முறையில் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

**கடம்பூர் ராஜு**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்